ஒரு தகராறை எழுப்பியது. இணக்க ஏற்பாடு நடைபெற்று வருகையில் மேற்குறிப்பிட்ட இரு தொழிலாளர்களும் 1—7—1969 அன்று உண்ணாவிரதம் மேற்கொண்டனர். தொழிலாளர் நல அதிகாரியின் நன்முயற்சியின் மூலம் 3—7—1969 அன்று உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டது. பின்னர் இந்த இரு தொழிலாளர்களும் நிர்வாகத்தினருடன் தங்கள் கணக்குகளைத் தீர்த்துக் கொண்டனர்.

Meeting of Chief Secretary with Burma Repatriates

* 214 Q.—THIRU N. S. V. CHITHAN, THIRU V. K. KOTHANDARAMAN, DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Chief Secretary to Gvernment has met the repatriates from Burma about the 27th November 1969; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :

(அ) ஆம்.

(இ) பர்மா அகதிகள் தலைமைச் செயலருக்கு ஒரு விண்ணப்பம் கொடுத்தனர். அதில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்காக சில்லறை விடுப்பு ரூ. 30 வழங்கியதில் சீர்கேடுகள் இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் செய்த நேர்முக விசாரணையில் இக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை எனத் தெரிய வந்தது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்காக ஒரு வங்கி ஆரம்பிக்கப்படவிருக்கிறதே, அது எப்போதிருந்து செயல்படத் தொடங்கும்? அதில் மத்திய, மாநில அரசுகளின் பங்கு என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இவர்கள் மேலும் சில கோரிக்கைகளை வைத்து அன்றைய தினம் பேசியிருக்கிறார்கள். அதில் பிரதானமான ஒன்று, அவர்கள் பர்மாவிலிருந்து வந்து இங்கு மிகவும் கஷ்டப்படுகிற காரணத்தால் சிறிது காலத்திற்கு அவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கக்கூடிய விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்பதும் ஒன்று. அது விஷயமாக என்ன முடிவு செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அது விஷயமாக அம்மாதிரி விதிவிலக்கு அளிப்பதற்கில்லை. ஆனால், அதைக்காட்டிலும் நல்ல பல நன்மைகள் செய்து அவர்களுடைய நலன்களில் இந்த அரசு நல்ல அக்கறை கொண்டிருக்கிறது. இந்த அரசு கொண்டிருக்கிற நல்லெண்ணத்தோடு மத்திய அரசில் உள்ள அந்தத் துறையும் நல்ல ஆதரவு கொடுத்து வருகிறது.